Eelakesari Educational Supplement

விலை சதம் 3

ஓம்.

# ஈழகேசரி

(கல்வி அனுபந்தம்)

"கற்பவை கற்றுக் கற்றுங் கொழுக"

புத்தகம் 2 | சுன்னாகம்: வெகுதானிய ஹூ கார்த்திகைமீ ககூஉ (4-12-38) | இல. 8

## இலங்கைக்கு மூன்று சர்வ கலாசாலைகள்

சமீபத்தில் தெல்லிப்பழையில் நிகழ்த்திய சொற்பொழிவில் திரு. நடேசபிள்ளையவர்கள் இலங்கையில் மூன்று சர்வகலாசாலைகள் இருக்க வேண்டிய அவசியத்தை எடுத்துரைத்தனர். தமிழ்ச் சர்வகலாசாலையும், சிங்களச் சர்வகலா சாலையும் அவசியம் தாபிக்கப்பட வேண்டும் என்று கூறியபோது, கண்டியில் தாபிக்க இருக்கும் சர்வகலாசாலையைப் பற்றிப் பின்வருமாறு கூறினர்.

"கண்டியில் ஏற்படுத்தப்படும் சர்வ கலாசாலை லண்டன் சர்வகலாசாலைப் பாடத் திட்டங்களை ஆதாரமாகக் கொண்டிருந்த போதிலும், எவ்வளவோ திருத்தத்தோடு கூடியது. அது தமிழ் சிங்களம் என்னும் இரண்டு பாஷைகளைப் புதிய கருத்துகளுக்கிணங்க வளரச் செய்யமாட்டாது. ஏனெனில் அச் சர்வகலாசாலையில் ஆங்கிலம், கற்பிக்கும் பாஷையாக இருக்க வேண்டியிருக்கிறது"

கண்டியில் ஏற்படுத்தப்படும் சர்வகலாசாலை புத்த நாகரிகத்துக்கும், பாளி, சிங்களம் ஆதிய பாஷைகளின் வளர்ச்சிக்கும் இருப்பிடமாக வேண்டுமென்ற எண்ணத்தோடேயே சிங்களத் தலைவர்கள் அதைத் தாபிக்க அரிதில் முயன்றனர். இது இவ்வாறாக, நமது பிள்ளையவர்கள் அது சிங்கள பாஷைக்கும் நாகரிகத்துக்கும் இருப்பிடமாகாது என்று கூறுவது ஆச்சரியத்துக்கிடமாயிருக்கின்றது. அச் சர்வகலாசாலையில் எப்போதும் ஆங்கிலத்தின் மூலம் கல்வி கற்பிக்கப்படப் போகின்றதா? சிங்கள பாஷையில கற்பிக்கும் காலம் ஏற்படாதா? ஒருகாலத்தில் சிங்களத்தில் கற்பிக்கும் காலம் ஏற்படும். அப்படி ஏற்படின் கண்டியிலும் கொழும்பிலும் இரண்டு சிங்களச் சர்வகலாசாலைகள் இருக்கவேண்டிய அவசியமென்ன?

தமிழ்ப் பள்ளிக்கூடங்களிலும் சிங்களப் பள்ளிக்கூடங்களிலும் 'மற்றிக்' வகுப்புவரையில் படிக்கிறார்களென்றும் அவர்களுக்கு உயர்தரக் கல்வியளிப்பதே தமிழ் சிங்களச் சர்வ கலாசாலைகளின் நோக்கமென்று பிளளையவர்கள் கூறினர். ஆங்கிலம் படிக்கும் பிள்ளைகளைப் பற்றியும் ஆங்கிலப் பள்ளிக்கூடங்களைப் பற்றியும் ஒன்றுங் கூறியதாகக் காணேம். தற்போதைய ஆங்கிலக் கல்விமுறை அற்றுப் போவதா? இருக்கிறதுபோல் இருப்பதா? அவருடைய சொற்பொழிவிலிருந்து பின்வருவன ஊகித்தறியலாம். தமிழ், சிங்களப் பள்ளிக்கூடங்களில் கற்றுத் தேறுபவர்கள் தமிழ் சிங்களச் சர்வ கலாசாலைகளிலும், ஆங்கிலப் பள்ளிக்கூடங்களில் தேறுபவர்கள் கண்டியிலுள்ள 'ஆங்கில'ச் சர்வகலாசாலையிலும் உயர்தரக் கல்வி பெறவேண்டுமென்பதே அவர் கருத்தாகும்.

இவ்வித கல்வி முறையினல் நாட்டுக்கு ஒருவித பலனும் ஏற்படாது. சர்வகலாசாலைகளாகிய இரத்தினங்களைத் தாபிக்க வேண்டுமென்று கூற முன் வந்த பிள்ளையவர்கள், தற்கால ஆங்கிலக் கலவி முறையை ஒழித்து இரத்தினங்களை இலங்கையிற் பதிக்க முன்வந்திருந்தால் இரத்தினங்களும் விளங்கும். தேசமும் சிறக்கும். நாடு முழுவதிலும் கல்வி தேசிய பாஷைகளில் கற்பிக்கப்படவேண்டும் என்ற பிரேரணையை ஏன் பிள்ளையவர்கள் கொண்டுவரக் கூடாது. தேசிய பாஷைகளிலும் ஆங்கிலத்திலும் கல்வி கற்பிக்கும் ஒழுங்கு இருந்தால், தேசிய பாஷையிற் கற்பிக்கும் சர்வ கலாசாலையில் எல்லாரும் படிப்பார்கள என்பதற்கு என்ன

(தொடர்ச்சி 60-ம் பக்கம் பார்க்க)

# எலியின் கதை

அத்தியாயம் 8.

## ஓர் பல் வைத்தியன் தேவைப்பட்டமை

நாங்கள் எங்கள் குடிசைக்குப் போனோம். அங்கே நொண்டி சௌக்கியமாக இருப்பதைக் கண்டு மகிழ்ச்சி யடைந்தேன். நான் அந்தக் குருட்டுக் கிழட்டெலியைப்பற்றி விசாரித்தேன். "அந்தக் கிழட்டெலியின் பல் ஒன்று முறிந்து போயிற்று" என்று நொண்டி சொன்னது. "அது முறிந்தது எனக்குத் தெரியும். ஒரு பீப்பாவின் இரும்பு வளையத்தைக் கடித்தபோது அந்தப்பல் முறிந்தது; ஒருபல் போனாலென்ன. மற்றையபற்களிருக்கின்றனதானே;" என்றேன் நான். அப்படியல்ல, ஒரு பல் முறிந்ததனால் அவ்வளவு நஷ்டம் ஏற்படவில்லை. எலிகளாகிய நாங்கள் ஓயாது பல்லால் ஏதாவதொன்றைக் கடித்துக் கொண்டிருக்கவேண்டும். இன்றேல், பற்கள் அதிவிரைவாக வளர்ந்து விடும். ஒன்றோடொன்று இடைவிடாது உரோஞ்சிக் கொண்டிருக்காவிட்டால், எமது பற்கள் வாய்க்குள் அடங்காது வளர்ந்து வெளியே புறப்பட்டு விடும். கிழட்டெலியினுடைய மேற்பல்லு முறிந்து விட்டபடியால், அதற்கு நேரே கீழேயிருக்கிற பல்லுக்கு வேலையில்லை. ஆகவே, அது வளர்ந்து விட்டது. அந்தவலியால் இப்போது கதைக்கவும் முடியாது" என்று நொண்டி சொல்லிற்று. நான் அந்த எலியைப் போய்ப்பார்க்கலாமா என்று கேட்டதற்கு, நொண்டியெலி "விரும்பினாற்போய்ப்பார்க்கலாம்" என்றது.

நான் கிழட்டெலியிடம் போனபோது நொண்டியெலி சொன்னமாதிரியேயிருக்கக் கண்டேன். கிழட்டெலியின் பல்லு அளவுக்குமிஞ்சி வளர்ந்துவிட்டது. அதனால் அதனுடைய துஷ்டக்குணங்கள் அடங்கி விட்டன. உணவை விழுங்குவதற்குக்கூட அதனால் முடியவில்லை. வளர்ந்த பல்லை வெட்டுவதற்குப் பல்வைத்தியரிடந்தான் போக வேண்டும். ஆனால், எலிகளாகிய எம்முட் பல் வைத்தியன் கிடையாதது நமது துர்ப்பாக்கியமே என்று கூறிக்கொண்டு நான் எனது இருப்பிடத்துக்குப் போய்விட்டேன்.

அங்கு சென்றதும் எனக்கு அந்த இரு சிறுவருடைய ஞாபகம் வந்தது. உடனே நொண்டியை நோக்கி, "இங்கேயிரு ஏழைச்சிறுவர்கள் வசித்தார்களே அவர்கள் கதியென்னவாயது," என்று கேட்டேன். "அவர்கள் இப்போதும் இங்கேயே வசிக்கிறார்கள். இப்போ அவர்கள் இருவருமாக வெளிச்செல்கிறார்கள். இன்னும் சொற்பநேரத்துள் வந்து விடுவார்கள்" என்றது நொண்டி. "அப்படியானால், அவர்களுடைய வறுமையினும் நீங்கவில்லைப்போலும்," என்றேன் நான். "அவர்களுக்கு அவர்களுடை பள்ளிக்கூடத்தில் மத்தியான போசனம் கொடுக்கப்படுகிறது" என்றது "நொண்டி. இங்கே நிலத்தின்மீது சிதறுண்டுகிடக்கும் துண்டுகள்யாவை. நான் இவற்றை முன்பு கண்டதில்லை" என்று நான் கேட்டபோது, "சின்னப்பையன் கூடைகள் செய்யத் தொடங்கியிருக்கிறான். அவன் நல்ல அழகாகச்செய்கிறான். கூடை செய்வதில் அவன் மகிழ்கிறான் போலத் தெரிகிறது," என்று நொண்டி பதிலுரைத்தது.

தூரத்தே யாரோ இருமுஞ் சத்தம்கேட்டது. இருமல் வரவரக்கடுமையாக விருந்தது. சிறிது நேரத்துள் இரு சிறுவரும் அறைக்குட் பிரவேசித்தனர். மூத்தவன் மிகவுங் களைத்துப்போய் நிலத்தின்மீது படுத்துக் கொண்டான். "ஓ! இருமல் அவ்வளவு கஷ்டமாயிருக்கிறதா?" என்று இளையவன் கேட்டான். "பறுவாயில்லை, அது சீக்கிரம் குணமாகிவிடும்," என்றான் மூத்தவன்.

அந்தச் சிறுவர்களில் இருந்த மாற்றத்தைக் கண்டு நான் பிரமித்துப்போனேன். என் கண்களையே நான் நம்பமுடியவில்லை. அவர்கள் முன்னையிலும் பார்க்க நிறம் பெயர்ந்திருந்தனர். தலைமயிர், 'கிராப்' பண்ணியிருந்தது. அவர்களுடைய கந்தைத் துணிகளையுங் காணவில்லை. கிழிந்த பழைய துணிகளும் அங்கே கிடந்தன. ஆனாற் செம்மையாகத் தைத்துத் திருத்தம் செய்யப்பட்டிருந்தன. யாரோ சிலர் அவர்களுக்குப் பாதரட்சையுங் கொடுத்திருந்தார்கள். அவர்கள் சட்டையும் அணிந்திருந்தனர்.

இளையவன் மூத்தவனுடைய கன்னத்தோடு தனது கன்னத்தையும் வைத்துக் கொண்டு, "அண்ணா! இப்போது இருமல் எப்படி," என்று கேட்டான். மூத்தவன், "இங்கிருந்தால், இருமல் ஒருநாளும் சுகப்படாது போலத் தோற்றுகிறது," என்று கூறிக்கொண்டே நடுங்கிக்கொண்டு கண்களை மூடி நித்திரையாயினான். இளையவன் அவனைத்தனது கரங்களால் அணைத்துக்கொண்டே படுத்தான். அவர்களின் சகோதர வாஞ்சை எலியாகிய எனது மனதையும் உருக்கி விட்டது.

(தொடரும்)

கலக்கமுற நெஞ்சைக் கலக்கித் திருப்பத, துலக்குபவன் நீயலையோ சொல்லாய் பராபரமே.

உல்லாச யாத்திரை—5

# அரசாங்கசபையும், ஆனந்தசாகரக் கரையும்

[மூர்த்தி]

கொழும்புக்குப் போனால் அரசாங்கசபை மண்டபத்தைப் பார்க்கத் தவறாதீர்கள். தலைநகரின் தகைமையை விளக்குங் கட்டடங்களில் அரசாங்கசபை மண்டபமும் அரசாங்க காரிய நிலையமும் முன்னணியில் நிற்பன. ஏன்? இவைகளின் பக்கலில் மோட்டார் வண்டிகள் கூடியிருக்குஞ் சாலையும் ஓர் காட்சி நிலையமாகவே தோற்றுகின்றது.

படிக்கட்டுகளின் வழியாக ஏறி மேலே சென்றோம். பொது ஜனங்களுக்காக விடப்பட்டிருக்கும் 'கலரி'களில் அமர்ந்திருந்தோம். திரு. குணரத்தினாவின் பிரேஸ்கோட்டில் அறிக்கைக் கண்டனப் பிரேரணை நடைபெற்ற நாளுக்கு நாலுநாட்களின் முன்பே பிரவேசச் சிட்டுகள் விநியோகிக்கப்பட்டு முடிந்து விட்டனவாம். எங்களுக்கு அவ்விதமான கஷ்டமொன்றும் நேரவில்லை. வாயிலில் நின்ற காவலாளி கூட, நாம் வாயிலண்டை சென்றவுடன் கையினை மேலே காட்டிப், போகும்படி சமிக்கை செய்தான் என்றால், அன்றைய கூட்டத்தைப் பற்றிப் பேசுவானேன். எங்களைவிட மிகச் சொற்பமானவர்களே அன்று அங்கு வந்திருந்தனர். பிரதிநிதிகளின் ஆசனங்களிலும் பல வெறுமையாகவே இருந்தன. இவற்றிற்குக் காரணம் சபையில் புகுந்ததும் தெரிந்துவிட்டது. அன்று வரவு செலவுத்திட்ட விவாத நாள். இந்த முக்கியமற்ற விஷயம் நடைபெறும் பொழுது இருந்தாலென்? இல்லாதொழியிலென்? என்று பலர் வீட்டிலேயே இருந்துவிட்டனர் போலும். கீழே அங்கத்தவர்களின் ஆசனங்கள் அழகுற அமைக்கப்பட்டிருக்கின்றன. அவை அமைந்திருக்கும் வடிவைச் சித்திரித்துக் காட்டலாமே தவிர வெறும் எழுத்துக்களாற் காட்ட முடியாது. தலைவர் தமக்கென அமைக்கப்பட்ட தனிப் பீடத்திற் தலைப்பாகையுடன் வீற்றிருந்தனர். அவரைக் காண எம்மவருக்கு மிக ஆனந்தமுண்டாயது. அவர் யாழ்ப்பாணத்தவரல்லவா? முன்னவரைக்கண்டுமிருக்கிறோம்; அவர் பதவியைக் கேட்டுமிருக்கிறோம். என்றாலும் அந்த இடத்தில், அந்த ஆசனத்தில், சந்தனப் பொட்டுத்திகழும் நெற்றியுடன் ஸ்ரீ. துரைசுவாமியைக் காணும்பொழுது தமிழராகிய எமக்கு ஒரு பெருமையாகத்தான் இருந்தது. அரசாங்கசபையை நினைக்கும்பொழுது திருவாளர்கள்: N. M. பெரேரா, குணசிலகா ஆதியோரின் பெயரே ஞாபகத்திற்கு வருகிறது. ஏன் என்று கேட்கிறீர்களா? அவரிருவருந்தான் அன்று இடையிடையே எழுந்து ஏதேதோ பேசிக்கொண்டிருந்த பேர்வழிகள். (மறந்துவிட்டேன்!) திரு. அளுவிகாரா ஒரு தினிசாகத்தான் காணப்பட்டார். வட இந்தியரின் உடை; கெம்பீரமான நடை. உள்வந்ததும் தலைவர்க்கு ஒரு நமஸ்காரம். ஆசனத்தின் இரு பாதங்கள் உயர ஊஞ்சலாடிக்கொண்டிருந்த காட்சி பார்வைக்கு அழகாகத்தான் இருந்தது.

கொழும்பு போன்ற நகரங்களில் உலாவுவது சந்தோஷந்தான்; ஆனாலும் அங்கு ஜீவித்துக்கொண்டிருப்பதென்றால் (சாதாரண மக்களுக்கு) எளிதல்ல. காலை எட்டுமணி தொடக்கம் மாலை நாலுமணிவரையில் அறைகளிலிருந்து வேலை செய்துகொண்டிருப்பதே பெரும்பாலாருடைய தொழிலாயிருக்கிறது. இவர்கள் நாள் முழுவதும் ஓரிடத்திலிருந்தே வேலை செய்ய வேண்டியவர்களாயிருக்கின்றனர். இயற்கை எவ்வளவு கஷ்டத்தை உண்டாக்குகின்றதோ, அவ்வளவு சுகத்தையும் உண்டாக்கிக்கொண்டுதானிருக்கின்றது. இங்குள்ளாரின் கஷ்டமூட்டைகள் யாவற்றையும் ஏற்றுக்கொண்டு புதிய இன்பத்தைக் கொடுக்க ஒரு நிலையம் அமைந்துதானிருக்கிறது. அதுவே 'காலிமுக' மைதானம். 'காலிமுகக்' கடற்கரையிற் காலையில் ஜன நடமாட்டத்தைக் காண்பதருமை. மாலை நாலு நாலரைமணியானதும் அமிர்தபானத்தை மொய்த்த ஈக்கள் போலக் கடற்கரையையே மறைத்துவிடுவர் மக்கள். இவ்விடத்தில் இலங்கையின் எந்த ஜாதி, சமய மக்களையுங் காணலாம். இலங்கையர் மட்டுமல்ல; இங்கு வரும் பிறநாட்டு மக்களனைவரையும் மாலையில் இவ்விடத்திற் காணலாம். இலங்கையரின் நாகரிக நிலையைக் காணவேண்டின் இங்கே பார்த்தலே சிறப்பு. நவநாகரிகத்தின் எல்லையை, அன்று வந்த புதிய நாகரிக முறைகளைப் பார்க்கவேண்டுமாயின் இக் கடற்கரையிலுள்ள ஆசனத்திலாயினும், புல்தரையிலாயினும் ஐரோப்பிய உடையுடன் அமர்ந்திருக்க வேண்டும். புத்தம்புதிய மாதிரியாகத் தைக்கப்பட்ட மேற் சட்டைகளைப் பார்க்கலாம். புதிய நிறங்களமைந்த காற்சட்டைகளைப் பார்க்கலாம். விதம்விதமான அழகிய நாய்களையுங் காணலாம். நேற்று வரவழைக்கப்பட்ட புதுத் தினிசுப் புடவையை நோக்கலாம். இன்னும் தலைசீவும் முறையைப் பார்க்க வேண்டுமோ? பொட்டிடும் வடிவைப் பார்க்க வேண்டுமோ? புடவைகட்டும் புதுமாதிரியை அறிய வேண்டுமோ? இவற்றையெல்லாங் கண்குளிரப் பார்க்கலாம். இதுமட்டுமல்ல, புலவர்கள் காவியங்களிற் கூறிய அன்னங்கள், பாவைகள், வண்டுகள், குவளைமலர்கள், கொடிகள் முதலிய அனைத்தையும் இங்கே மனமாரப் பார்க்கலாம். இங்கு முதல் வரிசையில் அடுக்கப்பட்டிருக்கும் மோட்டார்வண்டிகளும், அடுத்திருக்கும் பச்சைப் பசேலென்ற புற்றரையும், கடலோரமாக அமைக்கப்பட்டிருக்கும் அழகிய பாதையும், அலைகள் மோதும் நீலக்கடலும் அதன் மேற்படிந்திருக்குஞ் செக்கர் வானமுஞ் சேர்ந்து இந்திரவில்லெனத் தோன்றும். மாலைக்காலத்தில் இக்காட்சி ஓர் அழகிய ஓவியமாகத் தோற்றும்.

யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் நிறைந்துள்ள இடம் வெள்ளவத்தை. வெள்ளவத்தைக் கடற்கரையில் அங்கிருக்கும் மக்கள் சாயங்காலவேளையிற் தம் ஓய்வு நேரங்களை இன்பமாகக் கழிக்கின்றனர். யாழ்ப்பாண மக்களை வடித்தெடுத்த முதலாவதுவடி, வெள்ளவத்தையின் ஓர் பாகம் எனலாம். இங்கு அநேக யாழ்ப்பாண மக்கள் காணிவாங்கி வீடுகள் கட்டியிருக்கின்றனர். (தொடரும்)

# கள்ளுண்ட ஒரு களிமகன்

[வ. நடாராசா, S. S. C. மாணவன்,
முத்துத்தம்பி வித்தியாசாலை, திருநெல்வேலி.]

நாம், கட்குடியர். பலரது களியாட்டங்களை நேரிற் பார்த்திருக்கலாம். அவர்களின் பாக்களையும், ஆட்டங்களையும், மகிழ்ச்சியையும் எவரால் வருணிக்க முடியும். 'தத்தக்கப் பித்தக்க' என்ற நடையுடன் பாதைகளின் இருமருங்குஞ் சென்றுகொண்டே வரும் இவர்களின் காட்சிகளைப் பார்த்தால் எவ்வளவு சந்தோஷமாக இருக்கும். இங்கு ஒரு கட்குடியனுடைய செயல் வருணிக்கப்படுகின்றது.

கண் சுழலும்படியாகவும், மாலை சோரும்படியாகவும் ஒருவன் புளிப்புடைய கள்ளை மிகுதியாகக் குடிக்கின்றான். வெறி அதிகமாகிக்கொண்டே வருகின்றது. "என்னைவிடப் பெரியவன் ஒருவன் உலகில் இருக்கின்றானா" என்று இறுமாப்படைகின்றான். அரையிற் கட்டப்பட்டிருந்த சால்வையை அவிழ்த்துத் தலையிலே சுற்றிக்கொள்ளுகின்றான். உடுத்திருந்த வஸ்திரம் மெதுமெதுவாக நழுவிக்கொள்ளுகின்றது. "கள்ளை உண்ணுகின்ற மக்கள் சுற்றத்தோடு பெருகுக" என்று வாழ்த்துகின்றான். விரும்பியவாறெல்லாம் கெட்ட வார்த்தைகளைக் கூறுகின்றான். மூத்திப் பேற்றை நினைத்துவிட்டான்போலும். "மோட்சம் இலகுவாகக் கிடைப்பினும் யான் கட்குடிக்கின்றதாய இவ்விடத்தை விட்டு நீங்குதலாய பிறப்பை ஒருபோதும் விரும்பமாட்டேன்" என்று கண்டிப்பாகவே உறுதி கூறுகின்றான். அவனுடைய வாய் ஒருபோதும் ஓய்ந்தபாடு இல்லை. உளறிக்கொண்டே இருக்கிறான். ஊரிலுள்ளவர்களுள் மிகவுங் கெட்டவன் இவன்தான். அவனுக்கு இடையிடையே பாக்களும் முடுக்குகின்றன. செவ்வழிப்பண் சிதையும்படியாக—நீங்கும்படியாகக் கீதங்களைப்பாடுகின்றான.

ஐயோ! பாவம்!! ஒரு ஏழைப் பிராமணன் அவ்வழியால் வந்தார். கள்ளுண்ட அக் களிமகன் தன் கீதத்தை அவ்வளவில் நிறுத்திக்கொண்டே அவரை நோக்கிச் செல்லுகின்றான். 'அவன் குடியன்' என அறிந்து, பின்வாங்கினார் அப் பிராமணன். இதைக்கண்ட களிமகன், "செல்லாதே........ என்னாணை........ நில்.... இவ்விடத்து........ நீ........" என்றான். தலையிலே கட்டியிருந்த சால்வையை அவிழ்த்தான். பிராமணனை மிகத் தாழ்மையாக வணங்கினான். ஆயினும் அவன் குடித்த கள் சும்மாவிருக்கச் செய்யுமா? வெறி அடிக்கடியே உந்திக்கொண்டேயிருக்கின்றது, "நாம் உண்ணுகின்ற இந்த அருமையான கள்ளை—நன்றாக வடிக்கப்பட்ட நல்ல கள்ளை—குடிக்கக் குடிக்க இனிமையான கள்ளை உங்கள் பிராமணக் கூட்டத்தார் பழித்துக் கூறுவது ஏனோ? அதை இப்பொழுதே சொல்லிவிடு. இல்லையாயின் உன்னைக்கட்டிப் பிடித்து விழுத்திவிடுவேன்." என்று கூறிக்கொண்டே கையை ஓங்கியவண்ணஞ் செல்லுகின்றான், அக் களி மகன்,—அக் குடியன்.

இது ஒரு பண்டைக்காலத்து நிகழ்ச்சி. இதை ஒரு புலவர் வருணித்துள்ளார். அவர் வருணனையைக் கொண்டதே இது.

அவர் வாய் மொழி :—

"சுழலுங் கண்ணின் சோர்தரு மாலையன்
அழனறுந் தேற லார மாந்திக்
காழக மீக்கொண் டாழுந் தானையன்
மட்டுண் மக்கள் சுற்றமொடு பொலிகெனத்
துட்டக் கிழவி பெட்டவை பயிற்றித்
துறக்கங் கூடினுந் துறந்திவ ணீங்கும்
பிறப்போ வேண்டேன் யானெனக் கூறி
ஆர்த்த வாயன் ஊர்க்களி மூர்க்கன்
செவ்வழிக் கீதஞ் சிதையப் பாடி
அவ்வழி வருமோ ரந்த ணாளனை
*செல்ல லாணை நில்லிவ ணீயென
எய்தச் சென்று வைதவண் விலக்கி
வழுத்தினே முண்ணுமிவ் வடிநறுந் தேறலைப்
பழித்துக் கூறுநின் பார்ப்பனக் கணமது
சொல்லா யாயிற் புல்லுவென் யானென
கையலைத் தோடுமோர் களிமகற் காண்மின்"

* செல்லல் + ஆணை + நில் + இவண் + நீ

[ தேறல் – கள், காழகம் – வஸ்திரம், தானையன் – வஸ்திரம், மட்டு – கள், துட்டக்கிளவி – கெட்டவார்த்தை, பெட்டவை – விரும்பி, ஆர்த்த – சப்திக்கும், களிமூர்க்கன் – மிகவுங் கெட்டவன், செவ்வழி – ஒருபண், சிதைய – நீங்கும்படி. ]

## செந்தமிழ்க் கருவூலம்.

வித்தியாசாலைகளில் 7-ம் வகுப்புச் செய்யுள் நூலாக உபயோகிக்கத் தக்கதென வித்தியாபகுதியாரால் அங்கீகரிக்கப்பட்டது.

விலை சதம் 40

தனலக்குமி புத்தகசாலை, சுன்னாகம்.

# கல்வி - 35

( தமிழாசிரியர், திரு. கா. இளையதம்பி அவர்கள் )

மனித வாழ்க்கைக் கனுகூலப்படாது பயிர்களை நாசமாக்கும் பூச்சியினங்கள் உலகெங்கணு முண்டு. வீட்டுப்பொருள்களையும் புஸ்தகம் முதலானவற்றையுங் கடித்து நாசமாக்கும் இராமபாணத்தை யாவருமறிவர். இப்பூச்சிக்குக் கண்ணுமில்லை, இறகுமில்லை. எனினும் முகத்திலுள்ள நீண்ட இரண்டு மயிர்களாற் பஞ்சபுலனுகர்ச்சியதற்குண்டு. கரப்பானென்னு மின்னொருபூச்சி சர்க்கரை முதலிய பதார்த்தங்களில் வந்திருக்கவே புழுக்கைகள் பறிந்து அப்பதார்த்தங்கள் அசுத்தப்படும். சுவரிலுள்ள வெடிப்புக்களும், சாக்கடைகளுமே அதற்கிருப்பிடங்களாம். இப்பூச்சி பதார்த்தங்களைத் தின்றழிப்பதிலும் அசுததப் படுத்துவதிலுமேயே நமக்கு நட்டமுண்டாகின்றது.

வெட்டுக்கிளி வயல்களிலே கூட்டமாய் வந்திறங்கியங்குள்ள பயிர்களை யெல்லாம் நாசமாக்கும். நெல்வயல்களிலுங் கோதுமை வயல்களிலுமிவை யுண்டுபண்ணு மழிவு இம்மாத்திரமல்ல. இந்தியாவின் வடபாகம், எகிப்து சுவெஸ் கால்வாய்ப்பகுதிகளிலே இவற்றால் வருமழிவதிகம். சீவசாஸ்திர ஆராய்ச்சியாளர் வெட்டுக்கிளிகள் காலந்தோறும் புறப்பட்டு ஒரு தேயத்திற் சென்றிறங்கியத்தேயத்தைக் நாசப்படுத்துவதில்லையென்றும், அவை சென்றிறங்கிய தேயத்திலேயே தங்கிவிடுகின்றனவென்றும், அங்கு அவையுருமாற்றமடைந்த தத்துக்கிளிகளாகின்றன வென்றும் பின் சிலகாலத்தால் மறுபடியும் வெட்டுக் கிளிகளாகின்றன வென்றுங் கூறுகின்றார்கள். இதனாலவையொருதேயத்தை யழித்துவிட்டுப் பின்னொருதேயத்துக்கும் படையெடுத்துச் செல்வதில்லை யென்றுகொள்க.

மூட்டுப்பூச்சியினத்தைச் சேர்ந்தனவெனக் கொள்ளப்படும் பூச்சியினங்களுங் கொடியவையே. மூட்டுப்பூச்சியி னுபத்திரவ மித்தன்மையதென்று நாமெடுத்துக் கூறவேண்டா. யார்க்குந் தெரியுமே. மூட்டுப்பூச்சிக் கடியும் விஷத்தையுடையதென்றுங் காய்ச்சலினங்களிற் சிலவற்றைப் பிறப்பிப்பதுவென்றும், தோல்வியாதியைத் தருவதென்றும் கூறுவர். ஐரோப்பாவிலே கோதுமைப் பயிரை யழிப்பனவும், நெற்பயிரை யழிப்பனவும், பருத்தியை நாசமாக்கும் நெருப்புப் பூச்சியும், தேயிலையைத் தின்றழிக்கும் தேயிலைக்கொசுவும், நாரத்தையும் நாகரங்கமும் நாட்டப்பட்ட தோட்டங்களில் அவற்றின் இலை, பூ, பிஞ்சுகளைத் தின்று நாசம்பண்ணு மிலைப்பூச்சிகளும் மூட்டுப்பூச்சியினத்தைச் சேர்ந்தவைகளே. செடிப்பேனென்று மிவற்றுக்குப் பேராம். திராவசத்துச் செல்வதற்கும், கெட்டிப்பதார்த்தஞ் செல்வதற்கு மிவற்றினுதாரக்குழாயில் இரண்டு பகுப்புண்டென்பர்.

வண்டினங்களெனப்படும் மற்றொரு வகையுமுண்டு. இவை கரும்பு, நெல், தென்னை முதலியவற்றை யழித்துவிடுகின்றன. இவை கதிர்களையும், பூக்களையும், இலைகளையுங் குருத்துக்களையுந் தின்றுவிடும். தென்னந் தோட்டங்களில் வீண்டு தேடுவார் காணப்படுகின்றனரே. மாங்கனிகளிலே பூவோடு கூடிவாழ்ந்து பழுக்குங் காலம் வரையும் உள்ளிருந்து வெளியேறும் வண்டினங்களுமிருக்கின்றனவே. இவை யுள்ளிருந்து வாழுங் காலத்துப் புழுவடிவமாக விருப்பதை விசாரிக்க. அப்பிளின் கனியில் உள்ளிருந்து வசிப்பன பழுத்தவுடன் வெளிப்போந்து தமக்குக் கூடுகட்டி யுறங்கும் புழுக்களாக மாறுகின்றன. என்னே இயற்கையின் விந்தை!

மரத்தைக் குடைவனவும், அவற்றைக் கடித்து நாசமாக்குவனவுமான வண்டினங்களைக் கணக்கிடமுடியுமா? மேலும் வீட்டுத்தூண், உத்திரம் முதலியவற்றை நாசமாக்கும் வண்டினங்களெத்தனை? இளம்பிறைக் காலத்திலே தறிக்கப்படும் மரங்கள் பெரும்பாலும் வண்டுக்கடியாலாய துளைகளால் மானமற்றும்போகின்றன. பொதுவாக இரண்டுலட்சம் வண்டினங்களுண்டென்பர்.

பழங்கள் முற்றிப் பழுக்கவிடாம லழிக்கும் ஈ, கொசு முதலியன வெத்தனை? சில தேசங்களிலே இவை கனித்தோட்டங்களையே நாசமாக்கிவிடுகின்றனவாம். வற்றலாக்கப்பட்ட திராட்சைப்பழங்களுமிவற்றால் நாசமாகின்றனவே!

மனிதவாழ்க்கையின் சுகாதார நிலையையும் இவை கெடுத்துவிடுகின்றன. உணவுப் பொருளில் விஷத்தைச் செலுத்துவதாலும், நோய்க்கிருமிகளை காவிக்கொண்டுவந்து சுவாசம், போசனம் என்னுமிவற்றுளுட்செலுத்திவிடுவதாலும், எம்மைக் கடித்துவிடுவதாலும், போசனத்தை அசுசிப்படுததுவதாலும் எம் வாழ்க்கையை நாசமாக்கிவிடுகின்றன.

மனிதர்க்குக் கடித்து வலியுண்டுபண்ணும் பூச்சிகளுக்குள் எறும்பு, குளவி, தேனீ என்பன எங் கவனத்துக்குரியன. சற்றுங் கருங்குளவியை யாராய்க. இவற்றாலெத்தனை மனிதர் உடன் மரணமடைந்திருப்பர்! தேனீக்கடியும் சாதாரணமானதன்று. குளவிக்கடியாலும தேனீக்கடியாலும் மூச்சடைப்பு, கைகால் முடக்கம் முதலிய நோய்கள் வருகின்றன வென்று ஆராய்ந்தார் கூறுகின்றனர்.

---

(57-ம் பக்கத் தொடர்ச்சி)

நம்பிக்கை. உத்தியோகம் பெறவிரும்புவோர் எல்லோரும் கண்டியிலும், தமிழ் சிங்களச் சர்வ கலாசாலைகளில் ஒரு சிலருமே கற்பார்கள்.

நமக்கு முதலில் வேண்டியதென்ன? இரத்தினங்கள் போன்ற சர்வ கலாசாலைகளா? அல்லது கலப்பில்லாத தமிழ், சிங்களக் கல்வியா? நாட்டிலுள்ளோருக்கு நாட்டுமொழிகளில் முதலில் கல்வி கற்பிக்க வேண்டிய ஒழுங்கு ஏற்பட வேண்டும். பின்னர் சர்வகலாசாலைக் கல்வி நாட்டுப்பாடசாலைக் கல்விமுறைக்கேற்ப வளர்ச்சியடையும்.

நமது நாட்டில் இரண்டு சர்வகலாசாலைகளுக் கிடமுண்டேயொழிய மூன்று சர்வகலாசாலைகளுக் கிடமில்லை. தமிழ்ச் சர்வகலாசாலையொன்றும் சிங்களச் சர்வகலாசாலையும் போதுமானவை. அவை தொடங்குமுன், ஆங்கிலக் கல்வி ஒழியவேண்டுமென்பதைப் பிள்ளையவர்கள் உணர்வார்களாக.

# செட்டியாரின் தந்திரம்

"வ. இ"

**ரா**மசாமி செட்டியார் கொழும்பில் 'பிரபல ஜவுளி வியாபாரி. தீபாவளி முதல் நாள் அவர் தமது சொந்த ஊராகிய யாழ்ப்பாணத்துக்கு வர வேண்டியிருந்தது. புறப்படும் பொழுது வியாபாரத்தில் வந்தபணத்தை ஒரு மடிசஞ்சியில்போட்டு சட்டைப்பையில் வைத்துக்கொண்டார். தீபாவளி முதல் நாளன்று மாலை ரயிலுக்குப் புறப்பட்டார்.

இரவு நேரமாகையால் ரயிலில் உள்ளவர்கள் தூங்கிவிட்டனர். செட்டியாரும் 'பெஞ்சில்' இருந்தபடியே உறங்கிவிட்டார். நித்திரையில் யாரோ. தமது சட்டைப்பையில் கைவைப்பதுபோல் தோன்றவே, சிறிது கண்களை விழித்துப் பார்த்தார். பக்கத்திலே இருந்த ஆசாமி ஒருவர் தமது மடிசஞ்சியை எடுத்துக் கொள்வதைக் கண்டார். அந்த நேரத்தில் பதறினால் காரியம் கெட்டுவிடுமென்று தாம் நித்திரை போல நடிக்கத் தொடங்கினார். அந்த ஆசாமியும் மடிசஞ்சியை தனது இடுப்பில் சொருகி . சட்டையால் மறைத்துக் கொண்டு நித்திரை போல் கண்களை மூடிக் கொண்டான்.

செட்டியார் நித்திரையிலிருந்து விளித்தவர் போல விளித்துக் கொண்டு தமது மடிசஞ்சியைத் தேடினார். பின்னர் அந்த் ஆசாமியைத் தட்டியெழுப்பி. "என்னுடைய மடிசஞ்சியைக் காணவில்லையே" என்றார். "என்ன, மடிசஞ்சியா! அடடா! எல்லாரும் நித்திரையாயிருக்கும் போது எப்படித் திருட்டுப் போயிற்று. இந்தப் 'பெஞ்'சில் இருந்த ஒருவனைக் காணோம். அவன் திருடியிருக்கலாம். எது அதிகபணம் வைத்திருந்திரோ?" என்று அந்தமனிதர் பேசினார். "இல்லை; அந்தமடிசஞ்சியில் ஒன்றரையணாவும் சில 'பற்றுச் சீட்டுக்கடுதாசிகளுந்தான் வைத்திருந்தேன். நல்லவேளை இந்தப்பையில் ஐந்நூறு ரூபா, சொச்சம் வைத்திருந்த மடிசஞ்சி திருட்டுப் போகவில்லை." என்று சட்டையின் மற்றைப் பையிலிருந்து ஒரு மடிசஞ்சியை எடுத்துக்காட்டி சாமர்த்தியமாகப் பேசினார் செட்டியார். "என்றாலும் கவனமாயிருக்கவேண்டும். பணத்தை வைத்துக் கொண்டு தூங்கலாமா?" என்றான் அவன்.

"ஏதோ பணம் தப்பினது பரமசிவன் கடாட்சம் திருடன்தான் போய் விட்டானே. இனிப் பயமில்லை" என்று செட்டியார் முன்போல் பொய் நித்திரை செய்து குறட்டைவிடத் தொடங்கினார்.

தூங்குவது போலப் பாசாங்கு செய்த திருடன் செட்டியார் குறட்டை விடுவதைக் கண்டு மெல்ல எழுந்தான். எழுந்து செட்டியாருடைய மடிசஞ்சியை எடுதது்க் கொண்டு தான் முன்னர் திருடியமடிசஞ்சியை அவ்விடத்தில் வைத்து விட்டுப் படுத்துக்கொண்டான்.

உடனே செட்டியார் விழித்து தமதுமடிசஞ்சியைக் கையிலெடுத்துக் கொண்டு, "நல்லவேளை அந்தத் திருடன் ஏமாந்து போனான்! இல்லாவிட்டால் என்னுடைய ஐந்நூறு சொச்சமும் போயிருக்கும்" என்றார். திருடனுக்கு இவை கேட்டிருக்குமா? அவன்தான் நித்திரையிலிருக்கிறானே!

# எனது நற்பிரயாணம்

(எஸ். முருகானந்தன்)

**நா**ன் இலங்கையில் அதிகம் சுற்றுப்பிரயாணம் செய்தவனல்லன். ஆனால் ஒருமுறை யாழ்ப்பாணத்திலிருந்து நுவரெலியா என்னும் இடத்திற்குப்போக ஒரு சந்தர்ப்பமேற்பட்டது. ஆகவே நான் என்னுடைய சுற்றத்தவருள் ஒருவருடன் புறப்படத் தீர்மானித்திருந்தேன்.

ஓர் நாள் காலை மனோகரமான தென்றல் காற்று எங்கும் நறுமணத்துடன் வீசிக் கொண்டிருந்தது. ஒருபுறம் சேவல்களின் ஓசை. மற்றொருபுறம், காகம், குருவி முதலிய பலவகையான பட்சிகளின் இனிய ஓசை செவிகளைத் துளைத்தது. இப்படியான மங்கல ஓசைகளுடன் நாமிருவரும் யாழ்ப்பாணப்புகையிரத ஸ்தானத்தை அடைந்தோம். சுமார் எட்டுமணியளவில், நாங்கள் முன்பு கேட்ட ஓசைகளை ஓட்டும் 'பொருட்டோவென ஓர் பயங்கர சத்தத்துடன் ஒரு உருவம் எங்கள் கண்ணிற்குப் புலப்பட்டது. பின்பு அவவுருவம் வரவரப் பெரிதாகிக் கொண்டே எங்களை அணுகியது. அவ்வமயம் நாமிருவரும் புறப்படத்தயாராயிருந்தோம். சிறிது செல்ல மேற்கூறிய உருவம் நாங்கள் நின்ற இடத்தில் வந்து தங்கியது. உடனே நாமிருவரும் அவ்வுருவத்தினுள்ளே ஏறிஇருந்தோம். நாங்கள் உட்கார்ந்து பத்துநிமிஷத்திற்குப் பின்பே அவ்வுருவம் நகரத்தொடங்கியது பின்பு ஒவ்வொரு புகையிரதஸ்தானத்திலும் நாங்கள் செல்லும் (புகைவண்டியாகிய) அவ்வுருவம் பத்து நிமிஷத்திற்குக் குறையாமல தங்கிக் கொண்டேவந்தது. சுமார் பத்துமணியளவில் புகையிரதம் ஆனையிறவை 'விட்டு அகன்றது. பின்பு செல்லச்செல்லப் புகைவண்டியின் வேகம் சிறிது அதிகரித்துக் கொண்டே வந்தது. பின்பு அப்பால் இரண்டு மூன்று புகையிரதஸ்தானங்களைக் கடந்ததும் புகைவண்டியின் வேகம் மிகவும் அதிகரித்து சொல்லுதற்கரிதாய் ஓடத்தொடங்கியது. அப்பொழுது நாமிருவரும் அதிசயித்து வெளியே எட்டிப்பார்க்கையில் அடர்ந்த இருண்ட மரக்கூட்டங்களுக்குக் கிடையில் கோரரூபமான விலங்குகள் வெருண்டு ஓடுவதைக் கண்டோம். அப்பொழுது தான் இது ஒரு காடு என விளங்கியது புகைவண்டியைக் கண்ட புள்ளினங்களின் புரட்சியும் புகையிரத்திலிருந்து புறப்படும் அதிர்ச்சியால் வெருண்டு ஓடும், முயல் நரி முதலிய அற்ப பிராணிகளின் பாய்ச்சலும் எங்களுக்கு மிகவும் வேடிக்கையாக இருந்தது. இப்படி விநோதமான அநேக காட்சிகளைக் கண்டுகளி

அல்லெல்லாந் தீரவெனக் கானந்த மாகவொரு, சொல்லைஎன்பால் வைத்ததையென் சொல்வேன் பராபரமே.

சன்மார்க்க சபை 1934 குரும்பசிட்டி

கத்துக் கொண்டே காடுகளைத் தாண்டி நாடாகிய பொல்காவலை என்னும் புகையிரதஸ்தானத்தை அடைந்தோம். இவ்விடத்தில் புகைவண்டி வந்து தங்கியதும் நாமிருவரும் கீழே இறங்கினேம். அப்பொழுது வேறு சில ஜனங்களும் எங்களுடன் கீழே இறங்கினர்கள். சிறித்நேரம் நாங்கள் இளைப்பாறியபின்பு மலைநாட்டிற்குப் புறப்படும் வண்டி ஒன்றில்சென்று ஏறி இருந்தோம் சுமார் இரண்டரைமணியளவில் புகையிரதம் பொல்காவலையை விட்டுப்போனது. நாங்கள் இப்போ பிரயாணம் செய்யும் புகைவண்டி, முன்னே பிரயாணம் செய்த புகையிரதத்திற் பார்க்க எவ்வளவோ சிறிதாயிருந்ததுமன்றி மிகவும் ஆறுதலாகவே சென்றது. இப்புகைவண்டியில் பிரயாணம் செய்ய மிகவும் வேடிக்கையாகவிருந்தது. ஒரு மனிதன் நடக்கும் வேகத்தைப் போன்று ஓடிக்கொண்டிருக்கும் இவ்வண்டியில் உள்ள அநேக பிரயாணிகள் அநேக தடவை கீழே இறங்குவதும் சாவகாசமாக உலாவி விட்டுப் பின் வந்து ஏறுவதுமாயிருந்தார்கள். நானும் அவ்வண்ணம் செய்யக் கருதி ஒருமுறை கீழே இறங்கியபொழுது, புகையிரதம் எதிர் நோக்கிச் செல்லும்திசையைப் பார்த்தேன். அவ்விடத்தில் பிரமாண்டமான மலைகளின் உச்சியில் புகையிரதப்பாதை அமைத்திருந்தது. அதுவுமன்றி கீழே பார்த்தபொழுது பூமி மிகவும் ஆழமாகத்தெரிந்தது. இந்தக் காட்சியைக்கண்டதுத்தான் தாமதம் நான் உடனே, ஓடிப்போய் புகையிரதத்தில் ஏறிக்கொண்டேன். இப்படியே அநேக தூரம் புகையிரதம் சென்றபின் ஓரிடத்தில் மெள்ளெனத்தங்கியது. நாமிருவரும் உடனே கீழிறங்கி நாம் செல்லவேண்டிய இடத்திற்குப்போகும் வழியாலே சென்றோம். எங்களுடன் இன்னும் இருவர் வந்தனர். நாங்கள் அவர்களின் துணையைக்கொண்டே அநேக வழி நடந்தபின் ஒரு பெரிய மலையில் ஏறினேம். மிகவும் பிரயாசையுடன் அம்மலையில் ஏறி ஒரு சமதரையான இடத்தால் சென்றோம்.

நாங்கள் செல்லும் இருபக்கங்களிலும் உள்ள அழகுமிக்க சித்சில தடாகங்களின் அருகே உள்ள பிரமாண்டமான விருட்சங்களில் உல்லாசமாக வீற்றிருக்கும் பறவைகள் தமது ஒலிகளால் வாழ்த்தியம்பத தேனிறைந்த அழகிய தாமரை அரும்புகளாகிய கைகளைக் குவித்துப் பொய்கைகளெல்லாம மகிழ்ச்சி மிக்க தங்கள் முகத்தைக் காட்டின. வனப்பு மிக்க தோகைகளையுடைய மயிற்கூட்டங்கள் மிகுந்து நடமாடக் குளிர்ந்த நறுமணத்தையுடைய தென்றற் காற்ருனது வீச, வண்டுகள் ஒலிப்பச், செவ்விய தளிர்கள் கதிரவனதொளிபட்டு இலங்க, இலைகள் இருமருங்சும் அசைய, பூக்கள் விரிந்து முகம் போல் விளங்க, மெல்லிய கொம்புகளோடு பூஞ்சோலைகள் அசைந்தன. இவ்வனப்பு மிக்க காட்சிகளைக் கண்டுகளித்துக் கொண்டே அப்பாற்செல்ல பெரிய வயல்களிலுள்ள நெற்கதிர்களெல்லாம் தென்றற் காற்றுவாயிலாக வாசனை பொருந்திய மலரையுந் தகைளையுந் தூவி. அழகிய முகங்காட்டி வணங்கின. இவ்வண்ணமாக அநேக அதிசயக்காட்சிகளைக் கண்டுகளிப்புற்றுக் கொண்டே உயர்ந்தமலைகளில் மீது செல்லும்பொழுது, பாரிய விருட்சங்களின் வேரையொத்த மலைப்பாம்புகள் இன்று திமிரெடுத்து ஆங்காங்கே கிடக்கும் கோலத்தைக்கண்டுஅஞ்சி அப்பாற்செல்ல,பெரியவர்களின் தெளிந்த மனதைப்போன்று பாயும் அருவிகளில் உள்ள ஜலத்தைப் பார்த்தவுடன், அதிலொருமுறையாவது விழுந்தெழும்பிச் சென்ருலென்ன? என்றுந் தியங்கி அவ்வருவியை இடையறுவண்ணம் நோக்கிப்பார்க்கும் பொழுது அடியில் உள்ள கற்களெல்லாம் நவரத்தினத்தைப் போன்று ஒளிர்த்தன. நான் ஓடிப்போய் அதை வாரி அள்ளும்பொழுது அதுகற்களாயிருந்ததைப்பார்த்து வெட்கிச் சென்றேன். இவ்வண்ணமாக அநேக தூரஞ் சென்றபின்பு எங்கள் சுற்றத்தவருள் ஒருவரைச் சந்தித்து அவர் வீட்டிற்கு ஏகினேம்.

# சுகாதாரக்குறிப்புக்கள்

(முற்றொடர்)

வெளி உறுப்புக்களுக்குத் தேகப்பயிற்சி பயனளிப்பது போன்று உள்ளுறுப்புக்குச் சிரிப்புப் பயனளிக்கின்றது.

* * *

குரக்கன் மிகவும் சத்துள்ள தானியம். குரக்கன் தின்பதால் உடல் வன்மை கிடைகிறது. ஆனுல் நம் நாட்டார் இதை உண்பது கௌரவக்குறைவு என நினைக்கின்றனர்.

* * *

கூடியவரையில் யாவரும் தமது சரீரத்தை இயற்றி முறையிற்பேணி வருதலே நன்று.

* * *

வசதியுள்ளவர்களெல்லோரும் ஒரு நாளைக்கு ஒரு முறையாவது சோறுண்பதை விடுத்துப் பழங்களை உட்கொள்வது நன்று.

* * *

சூரிய ஒளி பயிர்களுக்கு எவ்வளவு அவசியமோ அதுபோல மனமகிழ்வு மனிதனுக்கு அவசியம்.

* * *

அசீரணத்துற்கு உபவாசம் ஓர் சிறந்த ஔஷதம.

* * *

மனமகிழ்வுள்ள மனிதனல் நன்கு உண்ணவும், உறங்கவும், வேலைசெய்யவும் வாழ்க்கையைச் சுவைக்கவும் முடியும்.

* * *

தேகத்தில் களைப்பு வரும்வரையில் தேகப்பயிற்சி செய்ய வொண்ணுது.

பொ. கணபதிப்பிள்ளை,
ச. மௌ. வித் பழைய மாணவன்
புட்டுவில் வடக்கு

குட்டிக்கதை.

# பாலர் பகுதி

ச. மு.

## (Fir) பேர் மரம்

ஒரு மரக்கூடலின் மத்தியில் 'பேர்' மரம் நின்றது. அது ஒரு அழகான சிறு மரம். ஆனால் அதிகம் துக்கப்பட்டது. அதன் காரணமாக அழத்தொடங்கியது.

"எல்லா மரங்களைப்போல் எனக்குப் பசுமையான இலை குழைகள் இல்லையே. நீண்ட மொக்குகளும் முட்களும் இருப்பதினாலே எனக்குக்கிட்ட மிருகங்களேனும் மனுஷர்களேனும் வருவதில்லை. அற்ப பட்சிகள்கூட வருவதுமில்லை, வாசஞ் செய்வதுமில்லை" என்று இவ்வாறாகப் புலம்பியது.

மறுநாள் அந்த மரம் நித்திரை விட்டெழுந்ததும் மற்றைய மரங்களைப்போல் தனக்கும் பசுமையான இலைகள் இருக்கக்கண்டு சந்தோஷமடைந்தது. சிறிது நேரம் சென்றதும் ஒரு ஆடு அதிலிருந்த இலைகள் எல்லாவற்றையும் தின்றது. மரத்துக்குக் கோபம் மூண்டது. ஆனால் என்ன செய்யலாம்! மனதை ஒருவாறாக அடக்கிக்கொண்டு தனக்குப் பொன் இலைகள் வேண்டுமென வேண்டிக்கொண்டது.

மறுநாள் தனது விருப்பத்திற்கேற்பப் பொன் இலைகளையும் பெற்றது. அவ்வழியாக ஒரு வியாபாரி சென்றான். அப்பொழுது அந்த மரம் பொன்மயமாக இருக்கக்கண்டு பேரானந்தம் கொண்டவனாய் ஒரு இலையேனும் மருந்துக்குக் கூடவிடாது எடுத்துக்கொண்டு ஓடோடியும் போனான். பேர் மரத்துக்கு முன்னரிலும் பன்மடங்கு கோபம் கூடியது. அதே யிரவு நித்திரை செய்யும் போது கண்ணாடி இலைகள் உண்டானால் நல்லது என்று யோசித்தவண்ணம் நித்திரையானது.

அதன் காரணமாக அடுத்தநாள் கண்ணாடி இலைகள் இருக்கக்கண்டு பெருமகிழ்ச்சியடைந்தது. ஆனால் அக்கண்ணாடி இலைகளை ஒருவரும் கைப்பற்றவில்லை. பத்து நாட்களுக்குப் பின்னர் உக்கிரமான புயல்காற்று வீசியது. பக்கத்தில் நின்ற மரஞ்செடிகள் அந்த மரத்தின்மேல் விழுந்து அதிலுள்ள கண்ணாடி இலைகள் நொருங்கித்தூளாயின. உடனே அது கோபாவேசங்கொண்டு எனக்கு ஒரு இலையும் வேண்டாம், பழைய படி மொக்கும் முள்ளுமே வேண்டுமென்று அவைகளைப் பெற்றது. ஒரு அல்லல் தொல்லை ஒன்றுமில்லாமல் சமாதானமாக இருந்தது. இப்போது அதனை ஆடாவது மனுஷனாவது மற்றைய மரங்களாவது துன்பப்படுத்துவதில்லை.

பிள்ளைகளே! "போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து" என்பதை மறந்து விடாதீர்கள்.

# ஈழகேசரி இளைஞர் சங்கம்

பிள்ளைகளே!

எத்தனையோ பிள்ளைகள் தங்கள் பிரயத்தனங்களுக்கு ஏற்ற பலன் கிடைக்கவில்லையென்று துக்கப்பட்டிருப்பார்கள். அதையறிந்தே நானும் உங்களுக்கு இன்னொரு தருணத்தைக் கழிந்தவார அனுபந்தத்தில் கொடுத்தேன். அவ்வனுபந்தத்தில் 4-ந் திகதி — 30-ம் திகதி என்று குறிக்கப்பட்டிருக்கிறது. அது பிழை.

இந்தமாதம் 18-ம் திகதிக்குச் சிறுகதைப்போட்டி உண்டு. இதேமாதம் 13-ம் திகதி புதன்கிழமை மாலை 4 மணிக்கு முன் கதைகள் 'ஈழகேசரி'க் காரியாலயத்தைச் சேரவேண்டும். மற்றைய நிபந்தனைகள் எல்லாம் முந்தியதைப்போன்றது.

கழிந்த சிறுகதைப் போட்டியில் ஒருவரே பரிசு பெற்றார். வரப்போகும் போட்டியில் முதல் இருவருக்கும் பரிசு அளிக்கப்படும். இவ்வருந்தருணத்தை இழந்துவிடாதீர்கள்.

பரிசுபெற்ற கதைகள் விசேஷமாயிருந்தால் முறையே ஒவ்வொரு வார வெளியீட்டிலும் பிரசுரிக்கப்படும்.

குழந்தைகளே! ஏதேதோ அதிகமாக எழுதவேண்டுமென்று பேனாவைக் கையில் எடுத்தேன். என் எண்ணங்கள் எழுத்தாக அமையவில்லை. மறுமுறையெல்லாம் விபரமாகத் தெரிவிப்பேன்.

இப்போ கிராமங்களில் பஞ்சமாபாதகங்கள் நாளுக்குநாள் வரவரக் கூடுகின்றன. ஊரவர்களும் பல முறைகளையும் கையாளுகின்றார்கள். பொழுது பட்ட பின்னராக ஒருவரும் வெளியே செல்ல வேண்டாம். அப்படிச் செய்தால ஒரு கெடுதியும் நேராது. இல்லையேல் பொலிஸ் நிலையம் எங்கு இருக்கின்றதென்பதைச் சுலபமாக அறியலாம். நமஸ்காரம். இங்ஙனம்

உங்கள் அன்பான "தாத்தா"

## விண்ணப்பப் பத்திரம்

திகதி.............................

அன்பார்ந்த தாத்தா!

தயவுசெய்து "ஈழகேசரி இளைஞர் சங்கத்"தில் என்னை ஒரு அங்கத்தவராகப் பதிவு செய்து கொள்ளுங்கள். இத்துடன் 12 சத முத்திரை ஆறு மாத சந்தாப்பணமாக அனுப்பியிருக்கிறேன். [ இந்தியா 2 அணா; மலாயா 16 காசு. ]

பெயர்.....................................................

பிறந்த திகதி..........மாதம்...............வருடம்............

விலாசம்.....................................................

.....................................

பெற்றார், அல்லது உபாத்தியாயர்

கையொப்பம் ...............................................

இந்த விண்ணப்பப் பத்திரத்தை நிரப்பி 'தாத்தா' c/o 'ஈழகேசரி', சுன்னாகம், இலங்கை என்ற விலாசத்துக்கு அனுப்பிவையுங்கள்.

யாழ்ப்பாணம்-மயிலிட்டி தெற்கு "திருமகள்நிலைய"த்திலிருக்கும் நா. பொன்னையா என்பவரால், சுன்னாகம் 'தலையாட்டி'யிலுள்ள திருமகள் அச்சியந்திரசாலையில் 1938-ம் ஞு டிசம்பர் மீ 4 உ ஞாயிற்றுக்கிழமை அச்சிடுவிக்கப்பெற்று வெளியிடப்பட்டது